**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண்.** 92 **நாள்:** 12.02.2026

**மாண்புமிகு மேயர் திருமதி ஆர். பிரியா அவர்கள், திரு.வி.க.நகர் மண்டலத்திற்குட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு வளர்ச்சித் திட்டப்பணிகளை இன்று நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.**

மாண்புமிகு மேயர் திருமதி ஆர். பிரியா அவர்கள், இன்று (12.02.2026) பெருநகர சென்னை மாநகராட்சி, திரு.வி.க.நகர் மண்டலம், வார்டு-74க்குட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் முதல்வர் படைப்பகம், பல்நோக்குக் கட்டடம், பூங்கா, நகர்ப்புற ஆரம்ப சுகாதா நிலையம், சென்னை பள்ளிக் கட்டடம் புனரமைப்பு, உடற்பயிற்சிக் கூடம், வணிக வளாகம் உள்ளிட்ட பல்வேறு வளர்ச்சித் திட்டப்பணிகளை இன்று நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

மாண்புமிகு மேயர் அவர்கள், வார்டு-74க்குட்பட்ட சுப்பராயன் தெருவில் சிஎம்டிஏ சார்பில் கட்டப்பட்டு வரும் முதல்வர் படைப்பகத்திற்கான கட்டுமானப் பணி, பாஷ்யம் 2வது தெருவில் மாநகராட்சி சார்பில் ரூ.66.05 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் பல்நோக்கு மையக் கட்டடப் பணி, சோமசுந்தரம் நகரில் உள்ள ஓ.எஸ்.ஆர். நிலத்தில் பூங்கா மற்றும் உடற்பயிற்சிக் கூடம் அமைப்பது தொடர்பாகவும்,

மங்களபுரம் கிருஷ்ணதாஸ் சாலையில் சிஎம்டிஏ சார்பில் கட்டப்பட்டு வரும் முதல்வர் படைப்பகக் கட்டுமானப் பணி, டேங்க் பங்க் சாலையில் மாநகராட்சி சார்பில் ரூ.1.70 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடப் பணி, ஏகாங்கிபுரம் சென்னை நடுநிலைப்பள்ளியில் சிஎம்டிஏ சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் புனரமைப்பு பணி, ஏகாங்கிபுரம் முதல் தெருவில் மாநகராட்சி சார்பில் ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு தற்போது செயல்பட்டு வரும் உடற்பயிற்சிக் கூடத்தின் செயல்பாடுகள் குறித்தும்,

பெரம்பூர் பிரதான சாலையில் மாநகராட்சி சார்பில் ரூ.5.50 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் அறிவியல் பூங்கா கட்டமைப்புப் பணி, ஜமாலியா பகுதியில் சிஎம்டிஏ சார்பில் ரூ.9.50 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் வணிக வளாகக் கட்டுமானப் பணிஉள்ளிட்ட பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

ஆய்வின்போது, மாண்புமிகு மேயர் அவர்கள் பொதுமக்களுக்கு பயனளிக்கக் கூடிய நலத்திட்டப் பணிகளை திட்ட மதிப்பீட்டு காலத்திற்குள் விரைந்து முடித்திட பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டும் என அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வுகளின் போது, மண்டல அலுவலர் திரு.ஜி.சொக்கலிங்கம், உதவிப் பொறியாளர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி,**